**Previous Examination Date:**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி.619-12

Deposition of Witness.P.W. 1

| | |
|---|---|
| Name: சுப்பிரமணியன் | Father Name: பழனியாண்டி |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

02-07-19 - சாட்சி ஆஜர் -சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் கூட்டுறவு சார்பதிவாளராக பழனி துணைசார்பு அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 7-7-07-ம் ஆண்டு நான் கூட்டுறவு சார் பதிவாளராக பணியில் இருந்தேன். சின்னகலையம்புத்துார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிங்கு நிர்வாக குழு தேர்விற்காக என்னை தேர்தல் அலுவலராக நியமனம் செய்தார்கள்.7-7-07-ம் தேதி சுமார் 9.00 மணியளவில் சின்னகலையம்புத்துார் தொடக்க வேளாண்மை அலுவலகத்திற்கு சென்று தேர்தல் பணி செய்து வந்தேன். சுமார் 9.45 மணி வரை 54 வாக்குகள் பதிவாகியிருந்தது. அப்போது நிர்வாக குழு உறுப்பினருக்கு போட்டியிடும் சின்னஎல்லப்பன், கருணாநிதி மற்றும் சக்திவேல் ஆகியோர் தங்களுக்கு வாக்கு சீட்டு கொடுக்குமாறு என்னிடம் கேட்டார்கள். நான் கொடுப்பதற்குள் என்னிடம் வந்து வாக்கு சீட்டுகளை பிடுங்கினார்கள். நான் தடுத்தேன். எனது மர்மஉறுப்பினை மூன்று பேரும் பிடித்து விட்டார்கள். என்னிடம் இருந்த வாக்கு சீட்டை மூவரும் பறித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். அங்கிருந்த காவலர்கள் தடுத்தும் அவர்களை தள்ளிவிட்டு விட்டு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். நான் இதுசம்மந்தமாக காவல்துறையினரிடம் புகார் செய்தேன். நான் கொடுத்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**Previous Examination Date:**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி.619-12

Deposition of Witness.P.W. 2

| | |
|---|---|
| Name: ஆறுமுகம் | Father Name: அம்மாகுளம் |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

02-07-19 - சாட்சி ஆஜர் -சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் கூட்டுறவு துறையில் கூட்டுறவு சார்ப்திவாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். 7-7-07-ம் தேதி சின்னகலையம்புத்துார் தொடக்க வோளண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நிர்வாக குழுஉறுப்பினருக்கான தேர்தல் பணிக்கு உதவி தேர்தல் அலுவலராக நியமிக்கப்பட்டிருந்தேன். தேர்தல் நானாளன்று காலை 9.00 மணியள்வில் வாக்குபதிவு தொடங்கப்பட்டது. தொடர்ந்து வாக்குபதிவு நடைபெற்றுக்கொண்டிருந்தது. சுமார் 55 வாக்குசீட்டுகள் வரை அமைதியாக நடந்தது. நான் தேர்தல் அலுவலருடன் பணியிலிருந்தேன். அப்போது சங்க உறுப்பினர் கருணாநிதி, சின்ன எல்லப்பன் ,சக்திவேல் ஆகிய மூவரும் வாக்குசீட்டு பெற வந்தனர். திடீரென தேர்தல் அலுவலரை தாக்கி அவரிடமிருந்த வாக்குசீட்டுகளை பறித்துச் சென்றனர். வாக்குசீட்டுகள் 100 இருக்கும். அவர்கள் அங்கிருந்தவர்களை தள்ளிவிட்டு விட்டு தப்பித்து ஓடிவிட்டார்கள். மேற்படி நபர்கள் நீதிமன்றத்தில் உள்ளார்களா என்றால், 12 வருடம் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. உடனே போலிசார் வந்தார்கள். எங்களை விசாரித்தார்கள். நடந்த விவரம் பற்றி சொன்னோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**Previous Examination Date:**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி.619-12

Deposition of Witness.P.W. 3

| | |
|---|---|
| Name: கிருஷ்ணசாமி | Father Name: வேலுச்சாமி |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

02-07-19 - சாட்சி ஆஜர் -சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் சின்னகலையம்புத்துார் கூட்டுறவு கடன் சங்கத்தில் செயலாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். 7-7-07-ம் தேதி நான் சின்னகலையம்புத்துார் கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக பணியிலிருந்தேன். அன்று காலை 9.00 மணிக்க தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தேர்தல் பணியைச் செய்தார்கள். காலை 9.45 மணி வரை சுமார் 50,54 வாக்குகள் பதிவாகியிருந்தது. அப்போது சின்னஎல்லப்பன் ,கருணாநிதி, சக்திவேல் ஆகியோர் வாக்குசீட்டு வாங்குவதற்காக வந்தார்கள். அவர்கள் வாக்குசீட்டை தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து பிடுங்கினார்கள். நாங்கள் தடுத்தபோது அவர்கள் எங்களை தள்ளிவிட்டு விட்டு ஓடிவிட்டார்கள். நீதிமன்றத்தில் சின்னஎல்லப்பனும், சக்திவேல் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். மறுநாள் என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**Previous Examination Date:**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி.619-12

Deposition of Witness.P.W. 4

| | |
|---|---|
| Name: முனியாண்டி | Father Name: பேராடையான் |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

02-07-19 - சாட்சி ஆஜர் -சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் சின்னகலையம்புத்துார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சிற்றெழுத்தராக பணியாற்றி வருகிறேன். 7-7-07-ம் தேதி நான் நகை மதிப்பீட்டாளராக சங்கத்தில் பணியாற்றி வந்தேன். எங்களது சங்கத்திற்கு கூட்டுறவு தேர்தல் நடந்தது. காலை 9.00 மணிக்கு தேர்தல் ஆரம்பித்து வாக்குபதிவு நடந்து கொண்டிருந்தது. சுமார் 54 வாக்குகள் 9.45 மணிவரை பதிவாகியிருந்தது. அப்போது சின்னஎல்லப்பன், கருணாநிதி மற்றும் சக்திவேல் ஆகியோர் வாக்கு போடுவதற்காக வந்தார்கள். அப்போது சின்ன எல்லப்பன் வாக்குசீட்டை வாங்கியபோது மூவரும் சேர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலரை அமுக்கி வாக்குசீட்டை பிடுங்கிக் கொண்டு தள்ளிவிட்டு விட்டு ஓடிவிட்டார்கள். சின்னஎல்லப்பன் மற்றும் சக்திவேல் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். கருணாநிதி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. கருணாநிதி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**